# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS.No.75/2015 Date: 02.12.2024

PW2-தங்கவேல்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குமாரபாளையம் ராஜாஜி குப்பத்தில் உள்ளதாக சொல்லும் நிலத்தின் ச.எண் எனக்கு தெரியாது. அது ஊர் நத்தம் நிலமா என்று எனக்கு தெரியாது. அது சீரங்கனுக்கு எப்படி பாத்தியம் என்றால் அந்த காலத்தில் அவர்கள் தான் குடியிருந்து வந்தார்கள். அதற்கு ஆவணம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. 2015 ல் நடந்த பஞ்சாயத்தில் நான் கலந்து கொள்ளவில்லை அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்தில் வாதிகள், பிரதிவாதிகளில் யார் எந்த பகுதி நிலத்தை அனுபவித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. வசந்தா வீட்டின் நீள, அகல அளவு தெரியாது. தாவா பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. வாதி தரப்பில் தயார் செய்து கொடுத்த நிரூபண வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுகொண்டதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாவில் எனக்கு தனிப்பட்ட விருப்பம் உள்ளதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் தனித்தனியாக அனுபவித்து வருவதை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மின்சார வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். நான் வேலைக்கு செல்வதில்லை.

Sd/-தங்கவேல்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.